## அறிமுகம்

பொதுப் பள்ளிகள் மட்டுமன்றி பா.மொ.க வும் எல்லா மாணவர்களின் அடையாளத்தை மேம்படுத்தப் பக்கத்துணை செய்யும் நோக்கினைப் பின்பற்றுகின்றன. ஒருவர் தன் அடையாளம் அதற்கெதிரான மோதல் என்பவற்றின் மேம்பாடு, ஒரு தனியாள் தன்னுடனும் சூழலுடனும் வாழ்நாள் முழுவதுமான எதிரும் புதிருமுடைய ஓர் உரையாடலை வேண்டிநிற்கிறது. ஒரு பல்பண்பாட்டு பன்மொழிச் சூழலில், தங்கள் அடையாளங்களை உறுதிப்படுத்தவும் தன்பயனுள்ளவர்களாக தாங்களே பட்டறிவுக்குட்படவும், வாழும் சூழல்களின் பன்மொழி, பல்கலாச்சாரத்தில் வாழும் மாணவர்களுக்கு பல வகைப்பட்ட வாழ்க்கைமுறை, பண்புகள் இருப்பதால் தமது அடையாளத்தை இனம் கண்டுகொள்ள கடினமாக இருக்கும். இப்படி இருக்கும்போது பா.மொ.க மாணவர்கள் தாம் சிறுபான்மையினர் மற்றும் தமது பண்பாட்டுத்தோற்றம் என்னும் தம் நிலையுடன் முரண்பட்டு தப்பித்துக்கொள்ளவோ, தங்கள் பண்பாட்டு இயல்புகளை மறுக்கவோ முடியாது. அவர்கள் தமக்கும், தாம் வாழும் சூழலுக்குமிடையே நடைபெறும் இடையறாத பேச்சுவார்த்தைச் செயன்முறைகளில், அவர்கள் ஒரு பக்கத்தில் தம் சமூக அடையாளத்தையே சார்ந்திருப்பர், மறுபக்கத்தில் பாதுகாப்புக்கும் அடையாளத்துக்குமான இடைவெளிகளிகளையும், இடங்களையும் சார்ந்திருப்பர். அங்கு அவர்கள் தங்கள் விலக்கல் பட்டறிவுகளை கலந்துரையாடி தங்கள் அடையாளம் பற்றி ஒருவர் மற்றொருவருக்கு உறுதிப்படுத்துவர்.

பா.மொ.க, மாணவர்களுக்கு தங்களுடைய பட்டறிவுகளுடன் உருக்காட்டவும் ஒத்துப்போகவும் அவர்களுக்கு உதவ முடியும். இதனூடாக பள்ளியிலும் சமூகத்திலும் பண்பாட்டுப் பன்முகத் தன்மையைக் கையாளுதற்கான சிறந்த தன்மையையும், பொறுத்தலையும் மேம்படுத்துதல் தொடர்பாக அது இன்றியமையாத பங்களிப்பினை நல்கும். இச் செயற்பாடு வெற்றியடையின், தன்பயன் ஒற்றுமை தொடர்பான பட்டறிவைப் பெற்று தங்கள் வலிமைகளையும் திறன்களையும் கண்டுபிடிப்பதற்கு மாணவர்களுக்குப் பக்கத்துணை வழங்கப்படும். இவ்வாறு செய்வதால், அவர்கள் தங்கள் (இரு) பண்பாட்டு அடையாளத்தின் ஒரு பகுதியான தங்கள் இன, பன்மொழி திறன்களின் வளங்களையும் உணர்ந்துகொள்ளவும் அவற்றைப் பாராட்டவும் கற்கின்றனர். பல்வேறு ஈர்ப்புகளையும் பண்பாட்டுப் பின்புலங்களையும் கருத்தில் கொள்ளும்போது, அவர்கள் தங்கள் தனித்துவத்தையும் தனிப்பட்ட நிலையினையும் கண்டுகொள்கின்றனர். குழுவினுள் அவர்களுடைய பொதுத் தன்மைகளையும் வேறுபாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு, அவர்கள் உலகமயமாக்கப்பட்ட வையகச் சமூகத்தினுள் தங்கள் பன்னாட்டு இணைப்பினை உணர்ந்துகொள்ளக் கற்கின்றனர். அதேவேளை, தங்களுடைய வேறுபட்ட சமூக பண்பாட்டு ஆளுமைப் பண்புக்கூறுகளுடன் எல்லா மாணவர்களின் அடையாளங்கள் பற்றிய இந்த ஒப்புதலும் பாராட்டும் வகுப்பில் ஒன்றாக வாழ்வதற்கும் கற்பதற்கும் பக்கத்துணை செய்கின்றன.

பின்வரும் ஏழு கற்பித்தல் பரிந்துரைகளில் விளங்கிக்கொள்ளும் திறன், பிரதிபலித்தல்த்திறன், பா.மொ.க கட்டமைப்பினுள் செயற்படும் திறன் ஆகியவற்றை முன்னேற்றுதற்குப் பங்களிக்கும். மாணவர்களுடைய அடையாளப் பட்டறிவுகள், வளங்கள், ஆற்றல் வளங்கள் என்பன எப்போதுமே தொடக்கப் புள்ளியாக அமைகின்றன. தங்கள் தனிப்பட்ட பிறநாட்டுப் பட்டறிவுகளுடன் ஆசிரியர்களே முதன்மைப் பங்கினை வகிக்கின்றனர். இது வகுப்பறைக் கற்பித்தலை ஏற்பாடு செய்யவும் நடத்தவும் பணியாற்றுகிறது.

எந்த பகுதித் திறன்கள் எந்த அலகில் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன என்பது இந்நூலின் முடிவிலுள்ள கண்ணோட்டத்திலிருந்து தெளிவாயிருக்கும். வகுப்புகளுக்கும் தரங்களுக்குமான ஒப்படைகள் பரந்த அளவில் வரையறுக்கப்பட்டுள்ளன; பெரும்பாலான பரிந்துரைகள் உயர் அல்லது கீழ்வகுப்புகளுக்கு மிகக் குறைந்த மாற்றங்களுடன் நடைமுறைப்படுத்தலாம்.